மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 2/2025**

**வா.சா. 1 பாண்டியராஜன், S/o கிருஷ்ணமூர்த்தி**
நாள்: 17.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு விபரங்கள் தெரிவித்தது யார் என்றால் நான் தான் தெரிவித்தேன். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் எத்தனை சொத்துக்கள் காண்பித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்துக்கள் நஞ்சையா அல்லது புஞ்சையா என்றால் நஞ்சை நில வகைப்பாட்டை சார்ந்தது. யசோதா மற்றும் ஜெயராம் எனக்கு என்ன உறவு முறை என்றால் அத்தை உறவு முறை. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் 3 ஏக்கர் 41 சென்ட் ஆகும்.

2) வழக்குரை சொத்தில் காட்டப்பட்டுள்ள சொத்தானது திருவண்ணாமலை மகன் சங்கரன் மற்றும் அவருடைய மனைவி பெருமா ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்கான பட்டா சங்கரன் மற்றும் பெருமா ஆகியோர்களின் பெயரில் கூட்டு பட்டாவாக இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்கான பட்டா எண் 2023 என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி சங்கரன் மற்றும் பெருமாள் ஆகியோர்களுக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள்

யசோதா, ஜெயராமன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்று சொன்னால் சரிதான்.

3) சங்கரன் மனைவி பெருமா கடந்த 04.07.2008 அன்று இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான். பெருமா உயிருடன் இருந்த காலத்திலேயே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 1 ஏக்கர் 76 சென்ட் நிலத்தினை அவருடைய வாரிசான யசோதா மற்றும் ஜெயராமன் ஆகியோர்களுக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. பெருமா காலம் சென்ற பின்பு அவருடைய கணவர் சங்கரன்தான் சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி சங்கரன் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவருடைய ஆண்மகனின் வாரிசுகளான கிருஷ்ணமூர்த்தி, அவரது குமாரர்களான பாண்டியராஜன், குருவாயூரப்பன் ஆகியோர்களுக்கு வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

4) வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி சொத்துக்கான உரிமையாளர் மைனர் பாண்டியராஜன் மற்றும் குருவாயூரப்பன் என்பதால் அவர்களுடைய பெயரிலேயே பட்டா இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அதற்கான பட்டா எண். 4014 என்று சொன்னால் சரிதான். வருவாய்த்துறையில் சமர்ப்பிக்கப்பட்ட வில்லங்கச் சான்றிதழில் 16.03.2009 ம் தேதியிட்ட பத்திரம் தொடர்பான பதிவு மட்டும் இடம்பெற்றிருந்த காரணத்தினால் வாதிகளின் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்து வந்த காரணத்தினால் ஜெயராமன் மற்றும் யசோதா ஆகியோர்களின் பெயரை பட்டா பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5) உரிமையியல் வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் வருவாய்த்துறை அதிகாரிகள் செயல்பட தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சார் பதிவாளர் அவர்களுக்கு எதிராக கேட்டுள்ள

செயல் உறுத்து கட்டளை பரிகாரமானது எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கை கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/—எம்.இராமநாதன்/—
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு